1973 ஆகஸ்ட் 14]

இதற்கிடையில் சுப்ரீம் கோர்ட்டில் அரசு சார்பில் வேறு மாநிலத்திற்கு மாற்றுவதற்குத் தேவை இல்லை என்ற கருத்தும் நிச்சயமாக அறிவிக் கப்படும்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister when the proposal to have 'one union for one industry' would be implemented?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லோரும் ஒத்துக்கொண்ட பிறகு.

திரு. என். கே. பழனிசாமி : 18-ம் தேதி சாயங்காலம் தாக்கப்பட்ட தினத்தில் நூறு பேர்கள் சைக்கிள் செயின்ஸ், பட்டாக் கத்திகளுடன் வந்து பஸ்களை நிறுத்தி, சைக்கிள்களை நிறுத்தி சிந்தன் வந்தாரா, குசேலர் வந்தாரா என்றெல்லாம் விசாரித்திருக்கிறார்கள். அருகே போலீஸ் ஸ்டேஷன் இருந்தும் கூட அந்தக் கூட்டம் ஏன் வந்தது என்பது பற்றி ஏன் விசாரிக்கவில்லை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூலக்கடை பேருந்து நிற்கு மிடத்தில் 20 முதல் 25 பேர்கள் மேற்படி பேருந்திற்குள் ஏறி தடிக ளாலும், இரும்புக் குழாய்களாலும், கத்தியாலும் சிந்தனைத் தாக்கியிருக் கிறார்கள். அதில் ஒருவர் திரு. சிந்தனின் முதுகில் குத்தியிருக்கிறார். மேற்படி கூட்டத்தினர் மூலக்கடை பேருந்து நிற்குமிடத்தில் பேருந்தில் நுழைவதைக் கண்டவுடன் பேருந்தை ஓட்டிச் சென்ற ஓட்டுநர், நடத்துநர் உள்பட எல்லாப் பிரயாணிகளும் பேருந்திலிருந்து இறங்கி ஓடியிருக் கிறார்கள். பிறகு, காயம் அடைந்து சிந்தன் விழுந்ததற்குப் பிறகு அந்தப் பேருந்து போலீஸ் ஸ்டேஷனுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக் கிறது.

Shifting of Madras Zoo

*2 S.N. *Q.*—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether sanction has been accorded to the Madras Corporation, to sell the site where the zoo is situated at present to the Railways; and

(*b*) if so, the place to which the zoo is proposed to be shifted?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) இல்லை.

(இ) மிருகக் காட்சிச் சாலையை சென்னை நகரத்துக்கு வெளியே மாற்றும் செயற் குறிப்பு ஒன்று இருக்கிறது. மத்திய ரயில் நிலையத்தை

விஸ்தரிப்பதற்காக மிருகக் காட்சிச்சாலை இருக்கும் இடமும் அதன் பக்கத்தில் உள்ள சில நிலங்களும் தென் பிராந்திய ரயில்வேக்கு தேவைப்படுகிறது. இது அனைத்தும் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : இந்த மிருகக் காட்சிச்சாலை அமைந்துள்ள இடத்தை தென் இந்திய ரெயில்வேக்குத் தருவது என்று அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறதா? அதற்கான ஏற்பாடுகள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன? எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : முடிவு செய்யவில்லை என்று சொன்னேன். கேட்டிருக்கிறார்கள். பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இதை மாற்றுவது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. எ. வகாப் : இப்போது மிருகக்காட்சிச்சாலை இருக்கிற இடத்தில், சென்னையில் உள்ள பிராட்வே பஸ் நிலையம் மிகவும் நெருக்கடியாக இருக்கிறது, எனவே அந்த இடத்திற்கு பஸ் நிலையத்தினை மாற்றுவதற்கு ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : மிருகக் காட்சிச்சாலை ஜன நடமாட்டம் உள்ள இடத்தில் இருந்தால்தான் அது ஜனங்களுக்கு வசதியாக இருக்கும். அதை ஜன நடமாட்டம் இல்லாத இடத்தில் அமைத்தால் வசதியாக இருக்காது. எனவே ஜன நடமாட்டம் அதிகமாக உள்ள இடத்தில் மிருகக் காட்சிச்சாலையை அமைத்தால் நன்றாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மிருகக்காட்சிச்சாலை நன்றாக அமையுமானால் மக்கள் கட்டாயம் அங்கு சென்று பார்ப்பார்கள்.

திரு. கே. கந்தசாமி : ஏதாவது குறிப்பிட்ட இடம் இப்போது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சென்னையில் உள்ள மிருகக் காட்சிச்சாலையை அமைக்க கிண்டி பூங்கா ஒதுக்கக் காடு, வண்டலூர் ஒதுக்கக் காடு ஆகிய இரண்டு மாற்று இடங்களை இப்போது அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. நா. வீராசாமி : இரண்டாண்டுகளுக்கு முன்னால் இந்த மன்றத்தில் இந்தக் கேள்வி வந்த நேரத்தில் மிருகக்காட்சிச்சாலையை வேறு ஒரு இடத்திற்கு மாற்றிவிட்டு நெருக்கடியான இடத்தில் இருக்கிற கொத்தவால்சாவடி மார்க்கட்டை இங்கே கொண்டுவரப் போகிறோம் என்று அப்போதிருந்த அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, அந்த யோசனை இருக்கிறதா?

1973 ஆகஸ்ட் 14]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றும் குறிப்பு இல்லை.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை மாநகரத்தில் இருக்கிற மிருகக்காட்சிச்சாலையில் இருக்கிற மிருகங்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. எந்த நேரத்தில் உயிர் போய் விடுமோ என்ற நிலையில்தான் அவை இருக்கின்றன. இங்கிலாந்து நாட்டில் தன்னிச்சையாக இயங்கக்கூடிய முறையில் பெரிய காடுகளில் கார்களுக்குள்ளே அல்லது வான்களுக்குள்ளே இருந்துகொண்டு சென்று பார்க்கிற அளவில் ஒரு மிருகக் காட்சிச்சாலையை அமைத்திருக்கிறார்கள். அதேபோல் சென்னையிலும் இயங்கக்கூடிய அளவிற்கு ஒரு காட்டில் இப்படி ஒரு மிருகக்காட்சிச்சாலையை அமைத்தால் மிக நன்றாக இருக்கும். அதற்கு ஏதாவது செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபோன்ற திட்டம்தான் அரசுக்கு இருக்கிறது. குறிப்பாக இப்போது ஹைதராபாத்தில் இருக்கிற மிருகக்காட்சிசாலையைப் போல்—அது நண்பர் செழியன் அவர்கள் குறிப்பிட்டதுபோல்தான் அமைக்கப்பட்டிருக்கிறது—அமைக்கவேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது.

திருச்சிராப்பள்ளியில் பெண்கள் பாலிடெக்னிக்

*124 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளியில் பெண்களுக்கென்று ஒரு தனி பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, எஸ். எஸ். எல். சி. வரையில் இப்போது 'கோ-எடுகேஷன்' முறை அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதேபோல் பாலிடெக்னிக், ஐ. டி. ஐ. போன்றவற்றிலும் அந்த முறை அனுசரிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது பெண்களுக்கு என்று தனி பாலிடெக்னிக்குகள் மூன்று இடங்களில் இருந்து, பெண்களுக்கு ஏற்ப, அவர்களுக்குத் தகுந்த பாடப் பகுதிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இப்போது ஆண்களுக்கு என்று அனுமதிக்கப்படுகிற பாலிடெக்னிக்குகளில் பெண்கள் சேர்க்கப்படுவது இல்லை. அது கொள்கை சம்பந்தமான ஒன்று.